26th September 1961]

the Madras Port Trust is concerned, from January 1959 onwards, a Passenger Station with first-class arrangements has been made ready to the passengers going to and coming from Singapore and that no complaints worth mentioning have been received from any of these passengers. No representations in this regard have been received by the State Government also.

SRI K. VINAYAKAM : பெரும்பாலான இந்த மலேயா பகுதியில் இருந்து வரும் பிரயாணிகளுக்கு நிபந்தனைப்பற்றி தெரியாத காரணத் தினால் பொன் போன்ற பொருள்களைக் கொண்டுவந்துவிட்டு பல சிக்கல் களில் சிக்கிக்கொள்கிறார்கள். ஆதலால் அவர்கள் எப்பேர்ப்பட்ட பொருள் களைக் கொண்டுவரவேண்டும், எவ்வளவு கொண்டுவரவேண்டும், எவ்வளவு ட்யூட்டி விதிக்கப்படும் என்பதைப்பற்றிய விவரங்களை விளம்பரப்படுத்துவதற்கு நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை கலந்தாலோசிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே இதற்கு விதிகள் இருக்கின்றன. அங்கிருந்து வருகிறவர்கள் எதை எதைக் கொண்டுவர வேண்டும் என்பதைத் தெரிந்துக்கொள்ளவேண்டும். அதன்படி சாமான் களைக் கொண்டுவந்தால் ஒன்றும் இல்லை. ஆனால் சில சமயங்களில் சில சாமான்களை மறைத்துக் கொண்டுவந்துவிடுகிறார்கள்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஒவ்வொரு பிரயாணி யும் எவ்வளவு பொருள் கொண்டுவரவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு, அதைவிட அவர்கள் அதிகமாகக் கொண்டுவந்தால், அதை சம்பந்தப் பட்ட அதிகாரிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்கிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. அப்படி பறிமுதல் செய்யும்போது, அவர்கள் கொண்டுவருவதற்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ள பொருள்களை மட்டும் விட்டு விட்டு மற்றவைகளை பறிமுதல் செய்யாமல். . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, all these things are outside the purview of this House and they will not be proper. So, I do not think further supplementaries on this question should be allowed.

DEPUTY SPEAKER : Yes. We shall now pass on to the next question.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Upper Bhavani Scheme

* 1825 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேல் பவானி அணைக்கட்டுத் திட்டம் தீட்டப்பட்டு எப்போது பரிசீலிக்கப்பட்டது ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (அ) and (இ) Various proposals relating to the Upper Bhavani Project have been under consideration of Government ever since 1905 and were deferred several times. The proposals for the Upper Bhavani Project were last considered in 1959 and were finally deferred.

But now we have asked the Chief Engineer for Irrigation to investigate the matter again. The Chief Engineer's report is now under the consideration of the Government.

[26th September 1961

Sri S. M. ANNAMALAI : 1905-ல் இத்திட்டத்திற்கு போட்ட மதிப்பீடு எவ்வளவு ? 1929-லே இந்தத் திட்டத்திற்கு போட்ட மதிப்பீடு எவ்வளவு ? இப்போது எவ்வளவு மதிப்பீடு போட்டால், அந்தத் திட்டம் நிறைவேறும் என்று சர்க்கார் கருதுகிறார்கள் ?

The Hon. Sri P. KAKKAN : நான் விடை சொல்லும்போது, இப்போது இது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இனிமேல் அதைப்பார்த்துத்தான் சொல்ல முடியுமே தவிர, முன்னதாகச் சொல்லிவிட முடியாது.

Flood bank (the Manimutha river)

* 1826 *Q*.—**Sri S. M. ANNAMALAI (on behalf of Sri M. Selvaraj) :** கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுக்காவில் கச்சிபெருமாநத்தம் கிராமத்திலிருந்து மணிமுத்து நதிக்கரைக்கு பரவளூர், விருத்தாசலம், சாவடிக் குப்பம் எல்லைவரையில் வெள்ளத்தடுப்புக்காக ஒரு திட்டம் தயாரித்தது உண்டா ?

(இ) அதற்காக செலவிட உத்தேசித்துள்ள தொகை எவ்வளவு ?

(உ) இந்த வேலை எப்போது துவங்கப்படும் ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) About Rs. 5 lakhs.

(*c*) The work will be taken up after detailed investigation has been completed and plans and estimates have been prepared and sanctioned.

Sri K. B. S. MANI : ஸார், இம்மாதிரி கொள்ளிடம், காவேரி கரைகளுக்கும் சர்க்கார் கரைகள் போட்டு வெள்ளத்தை தடுப்பதற்காக கரைகளைப் பலப்படுத்துவதற்கு என்று தனியாக ஒரு செக்ஷன் துவங்கி வேலை செய்வது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்களே, அவர்கள் நிரந்தரமாக எப்போது இந்த வேலையைத் துவங்க இருக்கிறார்கள் ? அதற்கு சர்க்கார் எப்போது உத்தரவிடும் ?

The Hon. Sri P. KAKKAN : நான் ஏற்கனவே இந்தச் சபையில் சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து கனம் அங்கத்தினர் தெரிந்து கொண்டிருக்கலாம். அதற்காக சூபரின்டெண்ட்டிங் என்ஜினியர் விசேஷமாக நியமிக்கப்பட்டு, பல அதிகாரிகள் அவரின்கீழ் நியமித்து வேலை செய்யும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. வெகு சீக்கிரத்தில் அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்காக அதற்கான ஸ்டாப் சாங்க்ஷன் செய்யப்பட்டு, வேலைகள் துரிதமாக நடைபெற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

Corporation of Madras (loans and subsidy for repairs to roads)

* 1827 *Q*.—**Sri K. VINAYAKAM (on behalf of Srimathi T. N. ANANDANAYAKI) :** கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசினர் அளித்த கடன் அல்லது மானியத்திலிருந்து சென்னை மாநகராட்சி மன்றத்தார் 3 மைல் தூர சாலையைச் செப்பனிடுவதற்காக சுமார் 28 லட்சம் ரூபாய் செலவிட்டுள்ளனர் என்ற உண்மை அரசினருக்குத் தெரியுமா ?